பக்கங்கள்:-17

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 05 | செவ்வாய்க்கிழமை | 19.03.2024 | அதிர்வு 231

## நீர்த்தேக்கத்தில் மூழ்கி இளம் பிக்கு உயிரிழப்பு

(ரஸீன் ரஸ்மின்)

தப்போவ நீர்த்தேக்கத்தில் மூழ்கி இளம் பிக்கு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ரஜரட்ட பிக்கு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வந்த ஹீல்ஓய 06▶

## வெடுக்குநாறிமலை விவகாரம்:

# இந்து மாமன்றத் தலைவி ரணிலுடன் நேரில் பேச்சு



### அதையடுத்து சுமந்திரனுடன் தொடர்பு கொண்டார் சாகல

வெடுக்குநாறிமலையில் சைவ பக்தர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து கொழும்பில் இந்து மாமன்றத்தின் தலைவரும் திருக்கேதீஸ்வரர் ஆலய நிர்வாக சபையின் பொருளாளருமான திருமதி அபிராமி கைலாயபிள்ளை நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்துப் பேசி முறையிட்டிருக்கின்றார். 06▶

## தமிழ்த் தேசியக் கட்சிகளின் எம்.பிக்களை நாளை நேரில் சந்திக்கின்றார் ஜனாதிபதி

வெடுக்குநாறிமலை விவகாரம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் எம்.பிக்களை நாளை புதன்கிழமை முற்பகல் 11:30 மணிக்கு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் உள்ள தமது அலுவலகத்தில் சந்தித்துப் பேசுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தரப்பில் நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதாக அறியவந்தது.

இந்த விவகாரத்தை ஒட்டிய விடயங்களை ஜனாதிபதி தரப்புடன் கையாளும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு இந்த நேர ஒதுக்கீடு குறித்து அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

நேற்று மாலை இந்தச் சந்திப்பை நடத்துவதற்கு நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை. இந்தச் சந்திப்பு நாளை புதன்கிழமை நண்பகல் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெறும் 06▶



## "வெடுக்குநாறிமலை தமிழர் சொத்து" யாழ். பல்கலையில் இன்று போராட்டம்




(எஸ்.நிதர்ஷன்)

"வெடுக்குநாறிமலை தமிழர் சொத்து" என்ற தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்றலில் இன்று நண்பகல் 12 மணிக்குக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தமிழர் தாயகத்தில் தொல்லியல் என்ற போர்வையிலான பண்பாட்டு அழிப்பையும் சிங்கள - பௌத்தமயமாக்கலையும் உடன் நிறுத்த வேண்டும் எனவும், வெடுக்குநாறிமலை 06▶




இது வெக்கை காலம். சூடு கிளப்பும் இந்த உஷ்ணம் வேறு சில பிரச்சினைகளையும் தருவதாக காலி காரப்பிட்டிய வைத்தியசாலையின் மனநல மருத்துவர் ரூமி ரூபன் கூறுகின்றார்.

அதிகஉஷ்ணம்–சூடு – உடல் ரீதியாக மட்டுமல்லாமல், மனரீதியாகவும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது என்கின்றார் அவர்.

உஷ்ணத்தின் பாதிப்பால் மனவலிமை குறைகின்றது. அது மன குழப்பங்களுக்கு ஆளாக நேரிடும் ஆபத்துக்களை தாராளமாக தரும் என்று அவர் முற்கூட்டியே 06▶




# தென் மாகாணத்தை மையப்படுத்தி விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை

தென் மாகாணத்தை மையப்படுத்தி நேற்று முதல் விசேட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதிகபட்ச செயற்றிறனுடன் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்படுவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

அதற்கு தேவையான அனைத்து திட்டங்களும் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தென் மாகாணத்தில் பதிவாகும் திட்டமிட்ட குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.




# வெப்பமான வானிலை தொடர்பில் மக்களுக்கு எச்சரிக்கை அறிவிப்பு

நாட்டின் பல பகுதிகளில் வெப்பமான வானிலை மேலும் அதிகரிக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடமேற்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் மேல் மாகாணங்கள் வெப்பமான வானிலை அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மொனராகலை, மன்னார், இரத்தினபுரி மற்றும் வவுனியா மாவட்டங்களில் சில இடங்களில் வெப்பத்தின் தர சுட்டியானது மனித உடலால் உணரப்படும் வெப்பம் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டிய மட்டத்தில் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்படி பகுதிகளில் உள்ள மக்கள் சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றுமாறு திணைக்களம் அறிவித்துள்ளது.




# கோலாகலமாக நிகழ்ந்தேறிய பசுமை அமைதி விருதுகள் விழா

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அமைதி விருதுகள் விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கோலாகலமாக நிகழ்ந்தேறியுள்ளது.

மாணவர்களிடையேயும் பொதுமக்களிடையேயும் சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களைச் சூழல்பாதுகாப்புச் செயற்பாடுகளில் பங்கேற்பாளர்களாக்கும் நோக்குடன் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் ஆண்டு தோறும் பசுமை அமைதி விருதுகளை வழங்கி வருகிறது.

2023ஆம் ஆண்டுக்கான விருதுகளை வழங்கும் விழா நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா கலந்து கொண்டிருந்தார். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் பணிப்பாளர் தி. ஜோன் குயின்ரஸ், கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் எம். எஸ். ஏ. கலீஸ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தார்கள்.

இவ்விழாவில் மாணவர்களிடையே அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட சூழல் பொது அறிவுப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் முதல் 200 மாணவர்கள் பசுமை அமைதிச் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள். இவர்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வெற்றியாளர்களுக்குச் சூழலியல் ஆசான் க.சி. குகதாசன் ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதுகள் வழங்கப்பட்டன. முதலாம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த கனிமொழி கணேசானந்தன் தங்கப்பதக்கம் வழங்கியும், இரண்டாம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த் ஆனந்தஜோதி அபிஷ்கர், மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியைச் சேர்ந்த சுதர்சன் வியாசகன் ஆகிய இருவரும் வெள்ளிப்பதக்கங்கள் வழங்கியும், மூன்றாம் இடத்தைப்பெற்ற ஓட்டமாவடி மத்திய கல்லூரியைச் சேர்ந்த முஹம்மட் முஸ்தபா மஹார் அஹமத் வெண்கலப் பதக்கம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

தாலகாவலர் மு.க. கனகராசா ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டுவரும் சிறந்த சூழல்நேயச் செயற்பாட்டாளருக்கான விருதை இம்முறை கொழும்பைச் சேர்ந்த செல்லப்பா கிருபானந்தமூர்த்தி பெற்றிருந்தார். இவருக்கு விருதோடு ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது. மேலும், தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் மாணவர்களிடையே நடாத்தப்பட்ட வீட்டுத்தோட்டப்போட்டியில்சிறந்தசெய்கையாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் மாணாக்க உழவர்களாகவும், தாவரங்களை அடையாளம் காணும் போட்டியில் அதிக எண்ணிக்கையான தாவரங்களை அடையாளம் கண்டவர்கள் தாவராவதானிகளாகவும் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

புலம்பெயர் தமிழர் கூட்டமைப்பின் அனுசரணையுடன்நடைபெற்றஇவ்விருதுகள் வழங்கும் விழா அரங்கு நிறைந்த பார்வையாளர்களுடன் மிகச் சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் வழங்கப்பட்டுவரும் சூழல்சார் விருதுகளில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அமைதி விருதுகள் அனைவரினதும் கவனத்தை ஈர்த்த முன்னிலை விருதுகளில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.



# மாணவர்கள் இரண்டு பேருக்கு சைக்கிள்கள் வழங்கி வைப்பு






யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தின் ஏற்பாட்டில் தேவைப்பாடு உடைய பாடசாலை மாணவர்கள் இருவருக்கு சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

சுவிட்சர்லாந்து வாழ் மயிலிட்டியைச் சேர்ந்த இன்பராசா அஜந்தா தம்பதியின் புதல்வி இ.றொவேனாவின் பிறந்த நாளை முன்னிட்டு, அவர்களின் நிதிப்பங்களிப்பில் இந்தச் சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு பருத்தித்துறையில் அமைந்துள்ள ஊடக இல்ல அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

# ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கத் தயார் ரஷ்ய ஜனாதிபதி போல் எனக்கும் அதிஷ்டம்

## இப்படிக் கூறுகின்றார் குமார வெல்கம எம்.பி.

"ரஷ்ய ஜனாதிபதி புடின் போல் எனக்கும் அதிஷ்டம் வருகின்றது. எனது ஜாதக நிலையும் நல்லதாகவே உள்ளது. ஆக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கத் தயாராகவே இருக்கின்றேன்." – என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களிக்க வேண்டாம் எனக் கூறினேன். ஆனால், மக்கள் வாக்களித்தனர். இறுதியில் என்ன நடந்தது? நான் கூறியதுபோல் நாட்டுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. எனவே, எமது கருத்துக்களையும் மக்கள் செவிமடுக்க வேண்டும்.

எனக்குக் கட்சி இருக்கின்றது, சிறந்த தலைவராக நான் உள்ளேன். அதுமட்டுமல்ல ஜாதக நிலையும் நல்லதாகவே உள்ளது. ரஷ்ய ஜனாதிபதி புடின் போல் எனக்கும் அதிஷ்டம் தென்படுகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்கான அனைத்து தகுதியும் எனக்கு இருக்கின்றது. எனக்கு இல்லாத தகைமை என்ன?" – என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.



# இளம் பெண் படுகொலை: பிரதான சந்தேகநபர் கைது



(எம்.எப்.எம். அலி)

சீதுவ, முத்துவாடிய பகுதியில் வாடகை அறையொன்றில் இளம் பெண் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் பலாங்கொடை வைத்தியசாலையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பலாங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் அளவுக்கதிகமான மருந்தை உட்கொண்டு பலாங்கொடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

26 வயதுடைய பெண்ணே கொலை செய்யப்பட்டிருந்தார்.

### சுழிபுரத்தில் விளையாட்டுப் போட்டியில்

# ஐஸ் கிறீம் விற்றவருக்கு 42 ஆயிரம் ரூபா தண்டம்

பாடசாலை இல்ல மெய்வல்லுனர் போட்டியின்போது சுகாதாரச் சீர்கேட்டுடன் ஐஸ் கிறீம் விற்பனை செய்த நிறுவனத்தின் உரிமையாளருக்கு 42 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், சுழிபுரம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றின் விளையாட்டுப் போட்டியின்போது சுகாதாரச் சீர்கேட்டுடன் ஐஸ் கிறீம் விற்பனையில் ஈடுபட்டமை தொடர்பில் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் 7 குற்றச்சாட்டுக்களை முன்வைத்து உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கு விசாரணைகளின்போது உரிமையாளர் குற்றங்களை ஏற்றுக்கொண்டதை அடுத்து உரிமையாளரைக் கடுமையாக எச்சரித்த மன்று, 42 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

# சுகாதாரத் தொழிற்சங்கங்களின் பணிப்புறக்கணிப்பு ஒத்திவைப்பு



சுகாதாரத் தொழிற்சங்கங்கள் இன்று முன்னெடுக்கத் தீர்மானித்திருந்த பணிப்புறக்கணிப்பு ஒரு வாரத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைத்த ஒன்றிணைந்த தொழிற்சங்கங்களின் ஏற்பாட்டாளர் ரவி குமுதேஷ் இதனைத் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஒன்றிணைந்த தொழிற்சங்கங்களின் தலைவர்களின் கூட்டத்திற்கு பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுகாதார அமைச்சின் எழுத்து மூல கோரிக்கையைக் கருத்திற் கொண்டு மேற்படி பணிப்புறக்கணிப்பு ஒருவாரத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளில் பெரும்பாலானவை நிறைவேற்றப்பட்டன

## இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவிப்பு



“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளில் பெரும்பாலானவை தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளன. அத்துடன், நிர்மாணிக்கப்பட்டு வரும் 162 பாலங்களின் பணிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டு மக்களிடம் கையளிக்கப்படும்”

– இவ்வாறு மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளில் பெரும்பாலானவற்றை நாங்கள் ஏற்கனவே நிறைவேற்றியுள்ளோம். 16,000 மில்லியன் செலவில் 162 பாலங்கள் நிர்மாணிக்கப்படும் என்று கூறினோம்.

அந்தப் பாலங்களில் ஒரு பகுதியை ஏப்ரல் 10ஆம் திகதிக்கு முன்னதாக பொதுமக்களிடம் ஒப்படைக்கத் தயாராக உள்ளோம். இதன்படி 162 பாலங்களும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திற்கு முன்னர் மக்களிடம் கையளிக்கப்படும்.

அத்துடன், சுற்றுலாத் தலங்களை அபிவிருத்தி செய்வதற்காக உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்ட 1000 மில்லியன் ரூபா திட்டமும் ஓகஸ்ட் மாத இறுதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்படவுள்ளது.

மேலும், 29 ஆயிரம் பல்நோக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் பெரும்பாலானோருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும். இன்னும் 2600 உத்தியோகத்தர்கள் எஞ்சியுள்ளனர். அவர்களை வெற்றிடமாக உள்ள பணியிடங்களுக்கு விண்ணப்பிக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளோம்.

இந்த ஆண்டில் ஓய்வு பெறுபவர்களுக்குப் பதிலாக பி.எல். 1-2 பிரிவுகளுக்கு மேலதிகமாக உள்ள ஊழியர்களை பணியமர்த்த அனுமதி அளித்துள்ளோம்.

மேலும் அனைத்து அமைச்சுக்களின் கீழும் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகளை விரைவில் நிறைவு செய்ய எதிர்பார்க்கின்றோம். நாடு நெருக்கடியில் இருந்து மீண்டு வருகிறது. இது அனைத்து துறைகளிலும் எடுத்துக் காட்டப்படுகிறது.

நாட்டை மீண்டும் கடந்த காலங்களில் இருந்த நிலைக்கு பின்னோக்கிக் கொண்டு செல்ல சிலர் முயற்சிக்கின்றனர். இப்படி இடையூறு செய்பவர்களுக்கு எதிராக தராதரம் பாராமல் சட்டத்தை செயல்படுத்துவோம்.” – என்றார்.




## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எச்சரிக்கின்றார்.

உஷ்ணத்தால் மனவலிமை குறைந்து, பாதிப்புகள் ஏற்படுகின்றமை ஆராய்ச்சிகள் மூலம் உறுதி செய்யப்பட்டிருக்கின்ற என்கிறார் அவர்.

அதிக உஷ்ணம் கவனச்சிதறல், அசிரத்தை, அயர்ச்சி போன்றவற்றைத் தரும்.

குழந்தைகள் மனவலிமை குறைந்து, பாடங்களை மறப்பர் அல்லது கவனிக்க முடியாமல் அசிரத்தையாகச் செயல்பட வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

இந்தக் காலகட்டத்தில் பெற்றோர் – பிள்ளைகள் முரண்பாடுகள், கணவன்-மனைவிநெருடல்கள்,குடும்பத்தகராறுகள், அயலவர்களுடன் பிரச்சினைகள், தரப்புகளுக்கிடையே மோதல்கள் என்று விபரீதங்கள் தம்பாட்டில் கட்டவிழும் என்கிறார் அந்த மருத்துவர்.

உடலால் அதிகமாக உணரப்படும் வெப்பம் காரணமாக சில கட்டுப்பாடுகளை மூளையும் பிற அவயவங்களும் கூட இழக்கின்றன என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

இதுதான், இக்காலகட்டத்தில் வீதி விபத்துக்கள் அதிகரிப்பதற்கும் காரணம் என்கின்றார் அவர்.

அதிக வெப்பம், மனநோயை உண்டாக்குகின்றது. மன நோய் உள்ளவர்களில் அதிக பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது. கவனக் கோளாறுகள், மனவிரக்தி, மனச்சலனம் போன்றவற்றை சூடு இயல்பாகவே மூளைக்குள் ஏற்படுத்துவதாகக் கூறப்படுகின்றது.

என் நண்பர் ஒருவரிடம் இந்த விடயம் குறித்து நேற்றிரவு தொலைபேசியில் பிரஸ்தாபித்தேன். அவர் நையாண்டியாக ஒரு கருத்துச் சொன்னார்.

“உதைத்தான் அந்தக் காலத்தில் ‘நட்டு கழருகிறன்து’ என்றார்கள். சூடு கூடி நட்டு விரிவடைந்து, வேகமாகக் கழற, விடயம் லூசாகி, குழப்பம் ஏற்படும்” – என்று தன் கிண்டல் பாணியில் பதில் தந்தார் அந்த நண்பர்.

எது,எப்படியோ.... அடுத்து வரும் நாள்களில் உஷ்ணம் எகிறும் என்கிறார்கள். எல்லோரும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

## இந்துமாமன்றத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதனை அடுத்து, ஜனாதிபதியின் தேசியப் பாதுகாப்புத் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாமின் பிரதானியுமான சாகல ரத்நாயக்கா, ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பியுடனும், திருமதி கைலாயபிள்ளையுடனும் தொடர்பு கொண்டு விவரங்களை விரிவாகப் பேசியிருக்கின்றார் எனத் தெரிகின்றது.

இந்தப் பேச்சுக்களின் அடிப்படையில் உரிய நடவடிக்கை அடுத்து வரும் நாள்களில் எடுக்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டது எனவும் அறியவந்தது.

திருக்கேதீஸ்வரம் தொடர்பான வழக்குகளில் திருமதி கைலாயபிள்ளையின் தரப்புக்காக நீதிமன்றத்தில் முன்னிலையாகி வருபவர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன்.

நேற்று மாலை அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார் திருமதி கைலாயபிள்ளை.

வெடுக்குநாறிமலை விவகாரம் தொடர்பில் தாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்துப் பேசி முறையிட்டார் என்றும், அது தொடர்பில் உடன் உரிய நடவடிக்கை எடுப்பார் என உறுதியளித்த ஜனாதிபதி, அதன் அடிப்படையில் தமது பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்காவின் அலுவலகத்தில் இருந்து இரண்டு சிரேஷ்ட அதிகாரிகளைத் தமது இல்லத்துக்கு அனுப்பி இருக்கின்றார் என்றும் குறிப்பிட்டார் இந்து மாமன்றத் தலைவரான திருமதி கைலாய பிள்ளை.

திருமதிகைலாயபிள்ளையின்வேண்டுகோளுக்கு இணங்க, அந்த அதிகாரிகளுக்கு நீதிமன்ற நிலைமைகளை விரிவாகத் தெளிவுபடுத்தினார் சுமந்திரன். எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளையும் விவரித்தார்.

அதற்குப் பின்னர் சுமார் ஒரு மணி நேரம் கழித்து சாகல ரத்நாயக்கா நேரடியாகச் சுமந்திரனுக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்து இந்த விடயம் குறித்து விரிவாகக் கலந்துரையாடலில் ஈடுபட்டு விவரங்களைக் கேட்டறிந்தார்.

“வெடுக்குநாறிமலையில் பூசை நடவடிக்கைகளுக்கு அனுமதி உண்டு. அதற்கான நீதிமன்றத் தீர்ப்பு இருக்கின்றது. அப்படி இருக்கையில் பகலில் பூசை நடத்தலாம், இரவில் பூசை நடத்த அனுமதிக்க வேண்டாம் என்ற உத்தரவு பொலிஸாருக்குத் தொல்பொருள் திணைக்களத்தின் பதில் இயக்குநர் நாயகத்திடம் இருந்து வழங்கப்பட்டிருக்கின்றது. பின்னர் இப்போது, அங்குள்ள தொல்பொருள்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன என்ற சான்றிதழ் ஒன்றையும் அந்த அதிகாரி நீதிமன்றத்துக்கு வழங்கியிருக்கின்றார். அதன் விளக்கத்தை – விவரங்களை – நீதிமன்றம்கோரியுள்ளது. முதலில் வழக்கு நாளை (இன்று) எடுக்கப்படும்போது விளக்கமறியலில் உள்ளவர்கள் பிணையிலாவது வெளியில் வர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அப்படி அங்கு எந்தப் பொருளும் சேதப்படுத்தப்படவில்லை. அது பற்றிய விவரங்களைப் பொலிஸ் தரப்பு நாளை (இன்று) சமர்ப்பிக்காமல், அதற்குக் கால அவகாசம் கேட்பதாக இருந்தால், அதற்கிடையில் விளக்கமறியலில் இருப்பவர்கள் பிணையில் வருவதை ஆட்சேபிக்கக் கூடாது. இது முதல் கட்ட நடவடிக்கை. அடுத்த கட்ட விடயங்களை நேரில் விவரமாக – சட்ட அடிப்படையில் – பேசி முடிக்க முடியும். இது தமிழ் மக்களின் இறைவழிபாட்டுடன் தொடர்புடைய உணர்வுபூர்வமான விடயம். அதிகாரிகள் இத்தகைய விடயங்களில் பொறுப்பற்று செயற்படுவதற்கு அரசுத் தலைமை இடமளிப்பது விபரீதங்களைத் தோற்றுவிக்கும்.” – என்று சுமந்திரன் தரப்பில் விளக்கமாகக் கூறப்பட்டது என்று அறியவந்தது.

நேற்று முன்னிரவில் இவ்விடயம் குறித்து பேசிய ஜனாதிபதியின் பணிக்குழாமின் பிரதானியினால் இன்று காலை வழக்கு நீதிமன்றுக்கு வர முன்னர் பொலிஸ் தரப்பு ஊடாகவோ, சட்டமா அதிபர் திணைக்களம் ஊடாகவோ உரிய நடவடிக்கைகளை எடுக்கக் கூடியதாக இருந்திருக்குமா என்பது இன்று வழக்கு விசாரணைக்கு வரும்போதுதான் தெரிய வரும்.

## தமிழ்த் தேசியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என அவர் ஏனைய எம்.பிக்களுக்குத் தகவல் தெரிவித்துள்ளார்.

அனேகமாக தமிழ்த் தேசியக் கட்சிகளின் எம்.பிக்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இரண்டு எம்.பிக்களும் கூட இதில் பங்குபற்றக்கூடும்.

நாளைய தினம் காலையில் தமக்கு முக்கிய வழக்குகள் கொழும்பு நீதிமன்றங்களில் இருக்கின்றன என்றும், அவை நேரத்துடன் முடிந்தால் தாம் நேரில் வந்து சந்திப்பில் பங்குபற்றுவார் என்றும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. நேற்று நீதியரசர் விக்னேஸ்வரனுக்குத் தெரியப்படுத்தினார் என அறியவந்தது.

தப்பித் தவறி நீதிமன்ற விடயம் காரணமாக இந்தச் சந்திப்பில் சுமந்திரன் பங்குபற்ற முடியாமல் இருக்குமானால், மேற்படி ஜனாதிபதியுடனான சந்திப்பில் வெடுக்குநாறிமலை விடயத்தை ஒட்டி வலியுறுத்தப்பட வேண்டிய விடயங்கள் பற்றிய வழிகாட்டல் குறிப்பு ஒன்றை எழுத்தில் விவரமாக அனுப்பி வைக்கும்படி நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் மின்னஞ்சல் கடிதம் மூலம் சுமந்திரனைக் கோரியிருக்கின்றார் என்றும் தெரியவந்தது.

## நீர்த்தேக்கத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சங்கானந்த தேரர் என்பவரே நேற்று நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் வனாத்தவில்லு வன்னாத்தவில்லு ஸ்ரீதர்மராஜ விகாரைக்கு வருகை தந்த மேற்படி இளம் பிக்கு, அங்கிருந்து பிக்குகள் குழுவுடன் தப்போவ நீர்த்தேக்கத்தில்நீராடச்சென்றபோதே இந்த அனர்த்தத்துக்கு முகம் கொடுத்துள்ளார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த இளம் பிக்குவின் சடலம் மீதான பிரேத பரிசோதனை இன்று நடைபெறவுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கருவலகஸ்வெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## “வெடுக்குநாறிமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆலயத்தில் நெடுங்கேணிப் பொலிஸாரால் திட்டமிட்டுக் கைது செய்யப்பட்டவர்களை உடன் விடுதலை செய்ய வேண்டும் எனவும் இதன்போது வலியுறுத்தப்படவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தமிழர் தாயகம் மீதான திட்டமிட்ட தொல்லியல் ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகச் சமூகமாக இன்று அணிதிரள்வோம் என்று மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

# நாடு முழுவதிலுமுள்ள அரச பல்கலைக்கழகங்களில் இன்று அடையாள வேலைநிறுத்தமும் ஆர்ப்பாட்டமும்

நாடு முழுவதிலும் உள்ள பல்கலைக்கழகங்களில் இன்று அடையாளவேலைநிறுத்தமும்கவனயீர்ப்புப்போராட்டமும்முன்னெடுக்கப்படவுள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்கக் கூட்டமைப்பின் 11.03.2024 மற்றும் 18.03.2024 திகதியிடப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்ட கடிதங்களின் பிரகாரம் இன்று முழுநாளும் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் வேலைநிறுத்தமும் கவனயீர்ப்புப் போராட்டமும் நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளுக்கு உரிய கால அவகாசங்கள் வழங்கப்பட்டும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அரசும் இதுவரை தீர்வை வழங்காதமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் உடனடித் தீர்வை வேண்டியும் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது என்றும், கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலும் இன்று முழுநாளும் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தையும், காலை 11 மணியளவில் பல்கலைக்கழக முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டத்தையும் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மேற்கொள்ளவிருக்கின்றது என்று யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் இணைச் செயலாளர் த.சிவரூபன் தெரிவித்துள்ளார்.

# இளம் ஆசிரியை வெட்டிக்கொலை

## மாத்தறையில் கொடூரம்

ஆசிரியை ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொடூர சம்பவம் மாத்தறை – ஊருபொக்க, டொலமுல்ல பகுதியில் இடம்பெற்றுள்ளது என்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ குறிப்பிட்டுள்ளார்.

26 வயதுடைய ஆசிரியையே கொலை செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொலையைச் செய்த சந்தேகநபர் தற்கொலைக்கு முயற்சித்தார் என்று தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

# பனங்காட்டுக்குள் திடீரெனத் தீ வீடு ஒன்று முற்றாக எரிந்து நாசம்



(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் பொலிஸ் நிலையப் பகுதியில் காடு திடீரெனத் தீப்பற்றி எரிந்தமையால் பரந்தளவு பனங்காடு சேதமடைந்ததுடன் ஒரு வீடும் முற்றாக தீயிற்கு இரையாகியுள்ளது.

இந்தச் சம்பவம் மன்னார் நகர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பட்டித்தோட்டம் பகுதியில் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

நேற்று மாலை மன்னார் – பட்டித்தோட்டம் பகுதியில் பனங்காடு ஒரு பகுதியில் திடீரென தீப்பற்றி எரிந்ததும் சம்பவ இடத்துக்குக்கு விரைந்த பொதுமக்கள், அருகிலிருந்த கடற்படையினர் மற்றும் மன்னார் நகர் பிரதேச செயலாளர் எம். பிரதீபன், மன்னார் அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளர் தீபன் , மன்னார் நகர சபை செயலாளர் ஆகியோர் தீ காட்டுக்குள்ளும் கிராமப் பகுதிக்குள்ளும் பரவாதிருக்கத் தீவிர முயற்சிகளை மேற்கொண்டனர்.

மன்னார் நகர சபையின் தீயணைக்கும் படையினர் குறிப்பிட்ட நேரத்துக்குள் சம்பவ இடத்துக்கு வருகை தந்து செயற்பட்டமையால் தீ பெரும் சேதத்தை உருவாக்கவில்லை.

இருந்தபோதும் காட்டுப் பகுதிக்கு அருகாமையில் இருந்த ஒரு ஓலை வீடு முற்றாக எரிந்து பல இலட்சம் ரூபா சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

இக்காட்டுத் தீ எவ்வாறு உருவாகியது என்பது இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

இது தொடர்பாக மன்னார் பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வெட்கக்கேடான விடயம்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபயவர்த்தனவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் முன் வைத்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று நாடாளுமன்றுக்கு வருகிறது. இன்றும் நாளையும் விவாதம். நாளை மாலை பிரேரணையின் மீது வாக்கெடுப்பு.

இந்த வாக்கெடுப்பில் எதிர்க்கட்சிகளைத் தோல்வியடைய செய்வதற்காக ஆளும் தரப்பு மும்முரமாக நிற்கின்றது என்பது வெளிப்படையானது. ஆளும் தரப்பு எம்.பிக்களை இதற்காக கொழும்புக்கு வெளியில் செல்ல வேண்டாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையை வைத்திருக்கும் ஆளும் தரப்புக்கு இந்தப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு ஒரு ஜூஜூபி விடயம். இலகுவாக அதனை ஆளும் தரப்பினால் தோற்கடித்து விட முடியும். ஆனால் அதன் பின்னரான விளைவுகள் குறித்து சிந்திக்கின்றனர் ஆளும் தரப்பு எம்.பிக்கள்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை விவகாரத்தில் அவர்களுக்கு - ஆளும் தரப்பு எம்.பிக்களுக்கு - கையைச் சுட்டுக் கொண்ட நல்ல அனுபவம் உண்டு. அதுவும் நீண்ட நாள்களுக்கு முன்னர் அல்ல. கடந்த செப்டம்பரில். அதாவது ஆறு மாதங்களுக்கு முன்னர்.

அப்போது சுகாதார அமைச்சராக இருந்த கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக இதே போன்று எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்திருந்தன. ஆளும் தரப்பு இப்போது போலவே அதனையும் எகத்தளமாக எதிர்கொண்டது. 113 க்கு 73 வாக்குகள் என்ற அடிப்படையில் அது தோற்கடிக்கப்பட்டது. அந்தப் பிரேரணை விடயத்தில் வென்று விட்டதாக ஆளுந்தரப்பு அப்போது மார்தட்டினாலும் கடைசியில் விவகாரம் ஆளுந்தரப்புக்கு பெரும் அரசியல் தோல்வியாகவே முடிந்தது.

என்ன காரணத்துக்காக அப்போதைய சுகாதார அமைச்சருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தனவோ, அந்த - அதே - காரணங்களுக்கான புலன்விசாரணையை ஒட்டி அதே கெஹலிய ரம்புக்வெல இப்போது கைதாகி விளக்கமறியலில் இருக்கின்றார்.

அவர் தொடர்பான விடயத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிக்கச் செய்த ஆளும் தரப்பு எம்.பிக்கள், அந்தச் செயலுக்காக இப்போது தங்கள் முகத்தை எங்கே கொண்டு போய் வைப்பது, எப்படி பொதுமக்கள் முன் காட்டுவது என்று அங்கலாய்க்கின்றார்.

நிகழ்நிலை காப்புச் சட்டம் மூலம் தொடர்பாக உயர்நீதிமன்றம் காட்டிய வழிமுறைகள், பரிந்துரைகள், கட்டளைகளைப் புறமொதுக்கி, உதாசீனம் செய்து, பொறுப்பற்று நடந்திருக்கின்றார் சபாநாயகர் என்பது துல்லியமாக - துலாம்பரமாக - இப்போது அம்பலமாகியிருக்கின்றது.

பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பான அரசமைப்புகவுன்ஸிலின்தீர்மானவிடயத்திலும் சின்னப்பிள்ளைத்தனமாக வாக்கு எண்ணிக்கையின் கணக்கை காட்டி இருக்கின்றார் அவர்.

இந்த விடயங்கள் எல்லாம் இன்றும் நாளையும் நாடாளுமன்றத்தில் பிய்த்து தறப்படும். நாடாளுமன்றத்தில் தமக்கு இருக்கும் பெரும்பான்மை மூலம் இறுதி வாக்கெடுப்பில் ஆளும் தரப்பு பந்தாடினாலும், கெஹலிய ரம்புக்வெல விடயத்தில் மக்கள் கருத்து நிலைப்பாடு ஆளும் தரப்புக்கு எதிராகத் திரும்பியமை போன்று இந்த விடயத்திலும் மக்களின் மனநிலை எதிரணியின் பக்கம் ஆழமாகத் திரும்புவதை ஆளும் தரப்பினால் சமாளிக்க முடியாமல் போகும் என்பது திண்ணம்.

அடிப்படை உரிமைகளையும், அரசமைப்பு ஷரத்துகளையும் பேணிப் பாதுகாக்கும் உயர் கட்டமைப்பான உயர் நீதிமன்றம், அடிப்படை உரிமைகள் தொடர்பாக வழங்கிய தீர்ப்பை உதாசீனம் செய்து, நிராகரித்து நடந்தமை மூலம் அரசமைப்பையும், உயர் நீதிமன்றத்தையும், அதன் மூலம் ஜனநாயகத்தையும் கூட, கேவலப்படுத்தியிருக்கின்றார் சபாநாயகர் எனச் சுட்டிக்காட்டுகின்றார் எதிரணி எம்.பியான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

இதனால், நாட்டில் இதுவரை சபாநாயகர்களாக இருந்த 25 பேரில் மிகவும் பலவீனமானவர் இந்த சபாநாயகர்தான் என்று அவர் குற்றம் சுமத்துவதில் நியாயம் உண்டு.

நாடாளுமன்ற விவகாரங்களைப் பொறுத்தவரை சபாநாயகர், பக்கம் சாராதவராக - நடுநிலையாளராக - நீதிபதி போல - செயல்பட வேண்டியவர். ஆனால் பேராசிரியர் பீரிஸ் குறிப்பிடுகின்றமை போல, இந்த சபாநாயகர் நிறைவேற்றதிகார ஜனாதிபதியின் எதேச்சாதிகாரத்துக்குத் துணை போகும் அதன் உப கட்டமைப்பாக சபாநாயகர் பதவியை மாற்றி விட்டார் என்பது உண்மையில் வெட்கக்கேடான விடயம் தான்...!

# தாக்குதலை தீவிரப்படுத்தியது இஸ்ரேல்: காசாவில் தொடர் துப்பாக்கிச் சத்தங்கள்

காசாவின் அல்ஸிபா மருத்துவமனை மீது இஸ்ரேல் திடீரென தாக்குதல் நடத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நள்ளிரவு நேரத்தில் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

மேலும், மருத்துவமனைக்குள் துப்பாக்கி பிரயோக சத்தங்கள் தொடர்ந்தும் கேட்டுக் கொண்டிருக்கின்றன தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மிகவும் துல்லியமான உயர் இலக்கை மையப்படுத்திய தாக்குதலை மேற்கொண்டுள்ளோம் என இஸ்ரேலிய படையினர் தெரிவித்துள்ளனர் என பிபிசியை மேற்கோள்காட்டி செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

மருத்துவமனைக்குள் ஹமாஸ் அமைப்பினர் மீண்டும் ஒன்றுசேர்ந்து தாக்குதலில் ஈடுபடுகின்றனர் என இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளதாகவும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.







# மாலைதீவு நாடாளுமன்ற தேர்தல்

## இந்தியா, இலங்கை, மலேசியாவில் வைக்கப்படவுள்ள வாக்குச் சாவடிகள்



மாலைதீவில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகள் இந்தியா, இலங்கை மற்றும் மலேசியாவில் வைக்கப்படவுள்ளன.

சுமார் 11 ஆயிரம் மாலைதீவியர்கள் தங்கள் வாக்குச் சாவடிகளை இடமாற்றம் செய்யுமாறு மறுபதிவு கோரிக்கைகளை சமர்ப்பித்ததை அடுத்து, நாட்டின் தேர்தல் ஆணையம் இந்த முடிவை எடுத்ததாக அறிவித்தது.

எதிர்வரும் ஏப்ரல் 21ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குச்சாவடிகளை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கான ஆறு நாள் கால அவகாசம் கடந்த சனிக்கிழமையுடன் காலாவதியாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிவிப்பை மேற்கோள் காட்டி ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி வாக்குப்பெட்டிகள், கேரளாவின் தலைநகர் திருவனந்தபுரம், இலங்கையின் கொழும்பு மற்றும் மலேசியாவின் கோலாலம்பூர் ஆகிய மூன்று இடங்களிலும் குறைந்தது 150 பேர் வாக்களிக்க மறுபதிவு செய்த பின்னர் வைக்கப்படும் என்று உயர் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

“முன்பு போல், இலங்கையிலும் மலேசியாவிலும் போதுமான மக்கள் பதிவுசெய்துள்ளனர். இந்தியாவில் திருவனந்தபுரத்தில் 150 பேர் பதிவு செய்திருப்பதால், அங்கு வாக்குப் பெட்டியை அமைக்க முடிவு செய்துள்ளோம்,” என்று தேர்தல் ஆணையத்தின் பொதுச்செயலாளர் ஹசன் ஜகாரியா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு மீண்டும் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது எனவும் இங்கிலாந்து, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் தாய்லாந்தில் வாக்களிப்பு நடத்தப்படாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.





# கோவையில் மோடியின் வாகன பேரணி பா.ஜ.க. தொண்டர்கள் உற்சாக வரவேற்பு

கோவை நேற்று மாலை இடம்பெற்ற வாகன பேரணியில் கலந்துகொண்ட பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

கர்நாடக மாநிலத்தில் இருந்து கோவை வந்த பிரதமர் மோடி, விமான நிலையத்தில் இருந்து தமிழக பொலிஸ் மற்றும் எஸ்.பி.ஜி. எனப்படும் சிறப்பு பாதுகாப்பு படையின் பாதுகாப்போடு கோவை சாய்பாபா கோயிலில் இருந்து துவங்கிய வாகன பேரணியில் பங்கேற்றார்.

வீதியின் இருபுறங்களிலும் குவிந்துள்ள பா.ஜ.க. தொண்டர்கள் பிரதமருக்கு மலர்தூவி உற்சாக வரவேற்பு அளித்தனர்.

சுமார் இரண்டரை கிலோ மீட்டர் தூரம் பிரதமர் மோடி திறந்த வெளி வாகனத்தில் இருந்தபடியே வீதியின் இருபுறங்களிலும் இருக்கும் மக்களைச் சந்தித்தார்.

இதையொட்டி, கோவை மற்றும் கோவையை சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்கள் திரண்டனர். நாதஸ்வரம், தப்பாட்டம், ஒயிலாட்டம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகள் வீதியின் இருபுறங்களிலும் அமைக்கப்பட்ட தற்காலிக மேடையில் கலை குழுவினரால் நடத்தப்பட்டன.

நீலகிரி மாவட்ட தோடர் மலைவாழ் மக்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் சார்பில் பிரதமர் மோடிக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைத்து தரப்பினரும் வீதியின் இருபுறங்களிலும் நின்று மோடியை பார்த்து வாழ்த்து தெரிவித்தனர். அவரும் மக்கள் அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்தவாறு கை அசைத்தபடி வாகனத்தில் பிரதமர் சென்றுவருகிறார்.

இந்த நிகழ்வில், பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை, மத்திய இணை அமைச்சர் எல். முருகன், தேசிய மகளிர் அணி தலைவி வானதி சீனிவாசன் உள்ளிட்ட கட்சி பிரமுகர்கள் பலர் பிரதமர் மோடியை வரவேற்றனர்.

மக்களவைத் தேர்தல் நெருங்க உள்ள சூழலில், பிரசாரம் மேற்கொள்வதற்காக பிரதமர் மோடி நேற்று கோவைக்கு வந்தார். கோவையில் வழக்கமாக அவர் பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்வார்.

ஆனால், இந்த முறை, பொதுக் கூட்டத்துக்கு பதில், 'ரோட் ஷோ' எனும் வாகன பேரணி நிகழ்வில் பங்கேற்று பொதுமக்களை சந்தித்து பிரசாரம் செய்துள்ளார்.





# தீவிரமான மக்கள் பணியாற்றுவதற்காக விருப்பத்துடன் இராஜினாமா செய்தேன்

## தமிழிசை சவுந்தரராஜன் விளக்கம்



"தீவிரமான மக்கள் பணியாற்றுவதற்காக எனது விருப்பத்தின் பேரில் நான் இராஜினாமா செய்திருக்கிறேன். தெலுங்கானா மக்கள் என்மீது காட்டிய அன்புக்கும், புதுச்சேரி மக்கள் என் மீது காட்டிய அபரிமிதமான அன்புக்கும் நான் நன்றி உடையவளாக இருப்பேன்."

– இவ்வாறு தமிழிசை சவுந்தரராஜன் கூறியுள்ளார்.

ஆளுநர் பதவியை இராஜினாமா செய்துள்ள நிலையில் சென்னை விமான நிலையத்தில் தமிழிசை சவுந்தரராஜன் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். இதன்போது அவர் கருத்து தெரிவிக்கையில்,

"தீவிரமான மக்கள் பணிக்காகத் திரும்ப வேண்டும் என்பதற்காகத்தான், நான் மனமுவந்து இராஜினாமா செய்திருக்கிறேன். தெலுங்கானா மக்கள் என்மீது காட்டிய அன்புக்கும், புதுச்சேரி மக்கள் என்மீது காட்டிய அபரிமிதமான அன்புக்கும் நான் நன்றி உடையவளாக இருப்பேன்.

எனக்கு ஆளுநராக வாய்ப்பு அளித்த குடியரசுத் தலைவர், பிரதமர், உள்துறை அமைச்சர் உள்ளிட்ட அனைவருக்கும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில், எனது உள்ளக்கிடக்கு நான் மக்களிடம் நேரடியாக பணியாற்றுவது. மக்கள் ஆளுநராகத்தான் நான் இரண்டு மாநிலங்களிலும் இருந்தேன். எனவே, தீவிரமான மக்கள் பணியாற்றுவதற்காக எனது விருப்பத்தின் பேரில் நான் இராஜினாமா செய்திருக்கிறேன்.

முதலில் என்னுடைய இராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அதன்பின்னர், எனது வருங்காலத் திட்டத்தை நான் நேரடியாகவே உங்களுக்குத் தெரிவிப்பேன். நான் இப்போது மக்கள் பணிக்காக எனது பதவியை ராஜினாமா செய்திருக்கிறேன் என்பது உண்மை." – என்றார்.




# திட்டமிட்டு வீடுடைத்துத் திருடப்பட்ட 20 பவுண் நகைகளை மீட்ட பொலிஸ்

## 3 சந்தேக நபர்களும் கைது; சவளக்கடையில் சம்பவம்

**(பாறுக் ஷிஹான்)**

பல இலட்சம் பெறுமதியான 20 பவுண் நகைகளைத் திட்டமிட்டுக் களவாடிய 3 சந்தேக நபர்களை சவளக்கடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சவளக்கடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 5 ஆம் கொலனி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த 14ஆம் திகதி வியாழக்கிழமை இரவு வீடு ஒன்றின் ஜன்னல் உடைக்கப்பட்டு உள் நுழைந்தவர்களால் சுமார் 39 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய 20 பவுண் நகைகள் களவாடப்பட்டுள்ளன என மறுநாள் வெள்ளிக்கிழமை முறைப்பாடு கிடைக்கப்பெற்ற நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

வீட்டின் உரிமையாளர்கள் இரவு நேர நோன்பு வணக்க வழிபாட்டிற்காக பள்ளிவாசலுக்குச் சென்ற சமயம் பார்த்து 3 சந்தேக நபர்கள் வீட்டின் ஜன்னலை உடைத்து இச்செயலை மேற்கொண்டிருக்கின்றனர்.

உடனடியாகச் செயற்பட்ட சவளக்கடை பொலிஸார் இத்திருட்டில் ஈடுபட்ட சாளம்பைக்கேணியை சேர்ந்த 33, 26 ,28 வயது மதிக்கத் தக்க மூன்று சந்தேக நபர்களைக் கைது செய்தமையுடன் சந்தேக நபர்கள் வசம் இருந்து களவாடி செல்லப்பட்ட 20 பவுண் நகைகளையும் மீட்டனர்.

இந்நடவடிக்கையில் சவளக்கடை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியும் பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டருமான எம்.எம். அஷ்ரப் வழிகாட்டலில் பெருங்குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரியும் சப் இன்ஸ்பெக்டருமான எஸ்.ரவீந்திரராசா, சப் இன்ஸ்பெக்டர் ஐயூப்கான், சார்ஜன்டுகளான அன்சார் (44203), ஜெசில்(44060), சம்பத்(70337), பொலிஸ் உத்தியோகத்தர்களான திசாநாயக்க (70302), சாந்தன்(73628) ஆகியோர் ஈடுபட்டிருந்தனர்.

சந்தேக நபர்களை கல்முனை நீதிவான் முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

# மயிலத்தமடு ஆர்ப்பாட்டம் தொடர்பான வழக்கின் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது



மட்டக்களப்பு – மயிலத்தமடு மாதவனை பிரச்சினைக்கு தீர்வை வழங்குமாறு கோரி ஜனாதிபதியை வலியுறுத்தும் வகையில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பான வழக்கின் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு – ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கின் தீர்ப்பு நேற்று வழங்கப்படவிருந்த நிலையில், நீதவான் மன்றுக்கு வருகை தராமையால் வழக்கின் தீர்ப்பை 2 நாள்களுக்கு ஒத்திவைக்க ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற பதில் நீதவான் வி.தியாகேஸ்வரன் உத்தரவிட்டுள்ளார்.

அதற்கமைய வழக்கின் தீர்ப்பு நாளை வழங்கப்படவுள்ளது.

கடந்த ஒக்டோபர் 8 ஆம் திகதி மட்டக்களப்பு செங்கலடி பகுதிக்கு ஜனாதிபதி வருகை தந்த சந்தர்ப்பத்தில் மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை பிரச்சினைக்கு தீர்வு கோரி வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பண்ணையாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறுப்பினர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட 37 பேருக்கு எதிராக வழங்கு தொடரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# 1,600 மில்லியன் யென் உதவியை இலங்கைக்கு வழங்கும் ஜப்பான்

ஜப்பான் அரசாங்கம் 1,600 மில்லியன் ஜப்பானிய யென்னை இலங்கைக்கு வழங்கவுள்ளது. இது இலங்கை நாணய பெறுமதியில் 330 கோடி ரூபா ஆகும்.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் நிலவும் இருதரப்பு பொருளாதார உறவினை வலுப்படுத்தும் வகையில் இந்த தொகை வழங்கப்படவுள்ளதாக நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சு தெரிவித்துள்ளது.

மின் உற்பத்தி உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், மகப்பேற்று சிகிச்சையை மேம்படுத்துதல், கடலோர காவல்துறையினை மேம்படுத்துதல் போன்ற செயற்பாடுகளுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.



# மரக்கறி விலையில் கணிசமான வீழ்ச்சி

நாட்டில் மரக்கறிகளின் விலைகள் சற்று வீழ்ச்சியைப் பதிவுசெய்துள்ளன.

இதன்படி, கெப்பெட்டிபொல பொருளாதார நிலையத்தில் ஒரு கிலோ கிராம் கரட் 280 ரூபாவாக பதிவாகியுள்ளது.

அத்துடன், ஒரு கிலோ கிராம் போஞ்சி 150 ரூபாவுக்கும், ஒரு கிலோ கிராம் வெண்டைக்காய் 180 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், ஒரு கிலோ கிராம் தக்காளி 250 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுவதாக தெரிவிக்கப்படுகின்றது.



# வெடுக்குநாறிமலை அராஜகத்தை கண்டித்து மூதூரில் கவனவீர்ப்பு!

(ஏ.எச்.ஹஸ்பர், அப்துல்சலாம் யாசீம்)

சிவராத்திரி தினத்தன்று வவுனியா – வெடுக்குநாறி மலை வழிபாட்டின்போது கைது செய்யப்பட்ட எட்டு பேரையும் விடுதலை செய்ய வலியுறுத்தியும், சிவராத்திரி பூசை வழிபாட்டுக்கு தடை ஏற்படுத்தியமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் மூதூரில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மூதூர் பிரதான வீதியிலிருந்து ஆரம்பமான நடைபவனி பிரதேச செயலகம் வரைக்கும் பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பியபடி போராட்டமாகச் சென்றது.

கவனவீர்ப்பில் ஈடுபட்டோர் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யக்கோரி சுலோகங்களை ஏந்தியவாறு கோசங்களை எழுப்பியமையையும் காணக்கூடியதாக இருந்தது.

இதன் பின்னர் மூதூர் பிரதேச செயலகத்திற்குச் சென்று பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர் எம்.அலாவுதீனிடம் மகஜர் ஒன்றையும் அவர்கள் கையளித்தனர்.

திருகோணமலை மாவட்ட ஒன்றிணைந்த சிவில் அமைப்புக்கள் இணைந்து இப்போராட்டத்தை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது












# மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலையில் புற்றுநோய்ப் பிரிவு கதிர்வீச்சு இயந்திர பழுது!

## நோயாளர்கள் வைத்தியசாலை நிர்வாகத்துக்கு எதிராகப் போராட்டம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலை புற்று நோய் பிரிவில் சிகிச்சைக் காக வைத்தியசாலைக்கு சென்ற நோயாளர்கள் கதிர்வீச்சு இயந்திரம் பழுதடைந்ததனால் சிகிச்சை பெற முடியாமல் திருப்பி அனுப்பப்பட்டனர். வைத்தியசாலையின் அசமந்த போக்கே இதற்குக் காரணம் எனக் குற்றச்சாட்டு தெரிவித்து நோயாளரும் பொதுமக்களும் நேற்றுத் திங்கட் கிழமை காலை வைத்தியசா லைக்கு முன்னால் ஒன்று திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்

இந்த வைத்தியசாலையின் கதிர் வீச்சு சிகிச்சைக்காக திருகோணமலை, அம்பாறை மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து நோய்க்கான சிகிச்சையை பெறுவதற்காக அதிகமான நோயாளர்கள் வருவது வழமை.

இந்த நிலையில் குறித்த கதிர்வீச்சு இயந்திரம் அடிக்கடி பழுதடைவதாகவும் இதனை திருத்தும் நபர் இங்கு இல்லாத காரணத்தால் யாழ்ப்பாணம் அல்லது கொழும்பில் இருந்து வர வேண்டியுள்ளதால் உரிய தினத்தில் சிகிச்சையை பெறமுடியாமல் போகின்றது எனவும் கூறப்படுகின்றது.

இதனால் பல்வேறு கஷ்டங்கள் மத்தியில் பிரயாணித்து வைத்திய சாலைக்குக் காலையில் சென்று அங்கு இரவு வரை காத்திருந்தும் சிகிச்சை பெறமுடியாமல் ஏமாறிச் செல்ல வேண்டியதுடன் உரிய காலத்தில் புற்று நோய்க்கான சிகிச்சையை பெறமுடியாதலால் நோய் அதிகரித்து உயிரிழக்க வேண்டிய நிலையும் பலருக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே குறித்த இயந்திரம் அடிக்கடி பழுதடைவதால் அதனை திருத்தும் ஒருவரை இங்கு நியமித்திருக்க வேண்டும், அதைவிடுத்து இயந்திரம் திருத்துபவர் இரண்டு அல்லது மூன்று தினங்களின் பின்னர் வரும்வரை நோயாளர்கள் காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பாக வைத் தியசாலை நிர்வாகம் கவனம் கொண்டு இதற்கான தீர்வினை பெற்றுதர வேண்டும் என நோயாளர்கள் சிறிது நேரம் போராட்டத்தில் ஈடுபடடு எதிர்ப்பை தெரிவித்தனர்.

இது தொடர்பாக வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் திருமதி கணேச லிங்கத்துடன் தொடர்பு கொண்டபோது, அவர் இது தொடங்கிய காலத்தில் இதற்கான எஞ்சினியர் இருந்தார், பின்னர் அவர் இல்லாத காரணத்தால் யாழ்ப்பாணத்திற்கும் மட்டக்களப்பிற்கும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரை சம்பந்தப்பட்ட கம்பனி பாவித்து வருகின்றது என்றார்.

இருந்தபோதும் பழுதடைந்து நேரத்தில் இன்று அவர் இங்கு இல்லை, எனவே அவரை போல் ஒருவரை இங்கு கடமைக்கு நியமிக்குமாறு குறித்த கம்பனிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளேன். எனவே எதிர்வரும் நாள் களில் இதற்கான தீர்வு கிடைத்துவிடும். – என்றார்.




# இலங்கைக்கு 10 கோடி டொலர் கடனுதவி வழங்குகின்றது ஆசிய அபிவிருத்தி வங்கி!

ஆசிய அபிவிருத்தி வங்கி, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு உதவுவதற்காக இலங்கைக்கு 100 மில்லியன் (10 கோடி) அமெரிக்க டொலர் கடனுதவி வழங்குவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் சிரேஷ்ட நிதித்துறை நிபுணர் மனோ ஹரி குணவர்தன அறிக்கையொன்றை வெளியிட்டு இதனை தெரிவித்துள்ளார்.

இந்த கடன் தொகையில், 50 மில்லியன் அமெரிக்க டொலர், ஏற்றுமதி, சுற்றுலா, தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் உற்பத்தித் துறைகளில் உள்ள பின்னடைவை சந்தித்துள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இந்த நிறுவனங்கள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52 சதவீத பங்களிப்பை வழங்குகின்றன.

மேற்படி நிறுவனங்களில் 45 சதவீத பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

எனவே, சிறிய நடுத்தர நிறுவனங்களுக்கு குறிப்பாக பெண்கள் தலைமையிலான நிறுவனங்களுக்கு, பொருளாதாரத்தில் தமது துறையின் பங்களிப்பை நிலைநிறுத்தவும் அபிவிருத்தியடையவும் தேவையான ஆதரவை வழங்குவது அவசியமானதாகும்.

அதன்படி, இந்த திட்டம் செயல்பாட்டு மூலதனத்தை வழங்குவதுடன், தமது செயல்பாடுகளை விரிவுபடுத்தவும், மாறிவரும் காலநிலைக்கு ஏற்ப தயார்படுத்தல்களை மேற்கொள்வதற்கும் உதவும்.

இதற்காக பெண்கள் தலைமையிலான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான உத்தரவாத மானியங்களை ஈடுகட்டுவதற்கு 5 லட்சம் அமெரிக்க டொலர் விசேட வசதியையும் இந்த திட்டத்தின் ஊடாக வழங்கவுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# ஐரோப்பிய விமான பாதுகாப்பு முகவரகத்தின் சர்வதேச ஒத்துழைப்பு மாநாடு கொழும்பில்

தெற்காசிய பிராந்தியத்தில் விமான பாதுகாப்பு மேம்பாட்டிற்காக ஐரோப்பிய விமான பாதுகாப்பு முகவரகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 8 ஆவது சர்வதேச ஒத்துழைப்பு மன்றத்தின் மாநாடு கொழும்பில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

கொழும்பில் உள்ள விருந்தகமொன்றில் தொடர்ச்சியாக 3 நாள்கள் இந்த மாநாடு இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டில் ஐரோப்பா, ஆப்பிரிக்கா மற்றும் ஆசிய நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 100 சிரேஷ்ட விமான போக்குவரத்து நிபுணர்கள் கலந்துக்கொள்ளவுள்ளனர்.

சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின் அனுசரணையுடன் இந்த மாநாடு இடம்பெறவுள்ளது.

# புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாயம் செய்த வெற்றிகரமான விவசாயிகள் ஜனாதிபதியைச் சந்தித்தனர்




அரை ஏக்கர் மிளகாய் பயிரிட்டு ஒன்பது மாதங்களில் 12 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டிய அநுராதபுரம், திரப்பனை, புளியங்குளம் கிராமத்தைச் சேர்ந்த இளம் விவசாயி பந்துல முனசிங்க மற்றும் ஒரு ஏக்கர் தர்பூசணி பயிரிட்டதன் மூலம் இரண்டு மாதங்களில் 4 மில்லியன் ரூபா வருமானம் பெற்ற கல்குளம பிரதேசத்தைச் சேர்ந்த இளம் விவசாயி புத்திக சுதர்ஷன ஆகியோர் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தனர்.

இந்த இளம் விவசாயிகள் தமது அறுவடையின் ஒரு பகுதியுடன் ஜனாதிபதியைச் சந்தித்துள்ளனர்.

அத்துடன், வளமான விளைச்சலைப் பெறுவதற்கு வழிகாட்டி அரசாங்கத்தின் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியமைக்காக ஜனாதிபதிக்கு அவர்கள் நன்றி தெரிவித்தனர்.

விவசாய அமைச்சின் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தினூடாக அறிமுகப்படுத்தப்பட்ட அதிக அடர்வு பயிர்ச் செய்கை முறையைப் பயன்படுத்தி பந்துல முனசிங்க அரை ஏக்கரில் மிளகாய் பயிரிட்டுள்ளார்.

அநுராதபுரம் திரப்பனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கல்குளம பிரதேசத்தில் வசிக்கும் புத்திக சுதர்சன 39 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

நவீன தொழில்நுட்பத்தில் ஒரு ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட தர்பூசணி சாகுபடியில் அதிக விளைச்சல் பெற முடிந்ததாகவும், ஒரு கிலோ தர்பூசணியை சுமார் 109 ரூபாய்க்கு விற்பனை செய்ததன் மூலம் இந்த அதிக வருமானத்தைப் பெற முடிந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் விவசாயத்தில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தில் இவ்வாறான இளம் விவசாயிகள் முன்னுதாரணமாக திகழ்கின்றனர் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன், விவசாயிகளின் செயலைப் பாராட்டி அவர்களுக்கு நினைவுப் பரிசுகளை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவும் கலந்து கொண்டார்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.03.2024


மேஷம்

இன்று உங்களுக்கு வெற்றிகரமான நாளாக இருக்கும். எளிதில் அனைத்து செயல்களையும் செய்வீர்கள். அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இன்று வெற்றி நிச்சயம்.

பணியில் உங்கள் சக பணியாளர்களால் தொல்லை ஏற்படும். மனதை நிலைநிறுத்தி அனுசரித்து பணி யாற்ற முயலுங்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளை பகிர்ந்து மகிழ்வீர்கள். இது நல்ல பக்குவமான புரிந் துணர்வை ஏற்படுத்தும்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படும். வங்கி யிலும் கணிசமான தொகையை பராமரிப்பீர்கள்.

இன்று நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். உங்களிடம் காணப்படும் தைரியம் உங்களை ஆரோக் கியமாக வைத்திருக்கும்.


ரிஷபம்

இன்று பதற்றம் காணப்படும். இசையை கேட்பதன் மூலம் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை காண்பதன் மூலம் மன துக்கு ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளை நன்றாக திட்ட மிட்டு கவனமுடன் மேற்கொள்ள வேண்டும். பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே திற மையாக கையாளவும்.

உங்கள் துணையிடம் அமைதியாக பேச வேண்டும். பிரச்னைகளை அமைதியாக தீர்க்க வேண்டும்.

இன்று பணப் புழக்கம் அவ்வளவு சிறப்பாக இருக் காது. செலவுகளும் அதிகமாக காணப்படுவதால் சேமிக்க இயலாது.

இன்று ஓய்வுக்கு நேரம் கிடைக்காது. கால்களில் வலி காணப்படும்.


மிதுனம்

இன்று சிறப்பான நாளாக இருக் காது. முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். எதையும் எளிதாக எடுத் துக்கொள்ள வேண்டும்.

பணியில் சவால்கள் நிறைந்திருக்கு, அதிகரிக்கும் பணிகள் காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை சிறந்த முறையில் திட்டமிட வேண்டும்.

நீங்கள் சிறிய விஷயத்தையும் பெரிதாக்குவீர்கள். உங்கள் துணையிடம் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

அஜாக்கிரதை காரணமாக பயணத்தின் போது பண இழப்புகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

செரிமானம் சம்பந்தமான கோளாறுகள் காணப்படும். எனவே ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.


கடகம்

பொறுப்புகள் அதிகமாக காணப்படும். இன்றைய சூழ்நிலையை சமாளிப்பதை பற்றி சிந்திப்பீர்கள். வீட்டு பிரச்சினை களை சமாளிப்பது பற்றிய கவலை இருக்கும். பாதுகாப்பின்மை உணர்வை தவிர்த்து விடுங்கள். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

சிறந்த முறையில் பணியாற்ற அருமையான வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் கடின உழைப்புக்கு சன்மானமாக பதவி உயர்வு கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் மனம் திறந்து பேச வேண்டும். இந்த அணுகுமுறை அவரை மகிழ்விக்கும்.

இன்று நிதி வளர்ச்சிக்கு உகந்த நாள் அல்ல. மருத்துவ செலவுகள் அதிகமாகக் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. செரிமா னம் சம்பத்தப்பட்ட பிரச்சினைகளால் பாதிக்கப்படுவீர்கள்.


சிம்மம்


இன்று மகிழ்ச்சியுடன் காணப்படு வீர்கள். மகிழ்ச்சியான தருணங்கள் உங்களை உற்சாகமாக வைத்திருக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். இன்று முக்கியமான முடிவுகளை எடுக் கலாம்.

நீங்கள் உங்களின் பலவீனங்களை புறந்தள்ளி பலத்துடன் பணியாற்றுவீர்கள். பணியில் உங்கள் நேர்மை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையிடம் காதலை வெளிப்படுத்தும் விதமாகப் பழகுவீர்கள். உங்கள் துணையுடன் நல்லு றவைப் பராமரிப்பீர்கள்.

உங்களிடம் உள்ள பணம் போதுமானதாக இருக்கும். சேமிப்புக்கான அடித்தளத்தை இன்று அமைப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். உங்கள் மனதில் உற்சாகம் காணப்படும்.


கன்னி

கடின உழைப்பின் மூலம் இன்றைய நாளைச் சிறப்பாக்கிக் கொள்ளலாம். இன்றைய நாளை சிறந்த முறையில் உபயோகிப்பதன் மூலம் உங்களின் திறமையை நிரூபிக்கலாம்.

உங்கள் பணிகளை முடிப்பதற்கான நேரம் குறைந்து காணப்படும். இதனால் உங்களுக்கு கவலை உண்டாகும். எனவே குறித்த நேரத்தில் பணி களை முடிக்க திட்டமிட்டு செயலாற்றுங்கள்.

உங்கள் குடும்ப முன்னேற்றம் பற்றி உங்கள் துணையிடம் விவாதிப்பீர்கள். இதன் மூலம் நல்ல புரிந் துணர்வு ஏற்படும்.

இன்று போதிய அளவு பணம் காணப்படும். உங்கள் கடின உழைப்புக்கான ஊக்கத்தொகை அல்லது சலுகை கள் கிடைக்கும் வாய்ப்புள்ளது.

இன்று முழுவதும் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.


துலாம்

உங்களுடைய அறிவைப் பயன் படுத்தி இன்றைய நாளை திட்டமிடுங்கள். சில சமயங்களில் நீங்கள் பொறுமையை இழக்க நேரும். எனவே அமைதியாக இருப்பது நல்லது.

பணிகளைக் கையாள்வதில் பொறுமை தேவை. இன்று பணிகள் அதிகமாக காணப்படும். எனவே பணிகளை உங்களால் குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிப்பூர்வமாக நடந்து கொள்வீர்கள், உறவில் திருப்தி நிலவ இதனைத் தவிர்த்தல் வேண்டும்.

இன்று பணத்தை அதிகமாக செலவு செய்வீர்கள். எனவே கடன்களை எதிர்கொள்ள நேரலாம்.

உங்கள் தாய்க்கு ஒவ்வாமை காரணமாக பாதிப்பு ஏற்படும். அதற்காக பணம் செலவு செய்ய நேரும்.


விருச்சிகம்

உங்கள் முயற்சிகளில் வெற்றி பெறுவதற்கு நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும். இன்றைய நாள் கடினமாக இருக்கும். நீங்கள் நம் பிக்கையோடு செயல்பட்டால் விரும்பி யதை அடையலாம்.

பணியைப் பொறுத்தவரை இன்று சிறப்பான நாளாக இருக்காது. பணிகள் நிலுவையில் இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். பணியில் மந்த நிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் பாதுகாப்பின்மையை உணர் வீர்கள். இந்த மாதிரி உணர்வுகள் உறவுக்கு உகந்ததல்ல.

குடும்ப பெரியவர்களின் ஆரோக்கியத்திற்கு செலவு செய்யும் வகையில் இன்று அதிக செலவினங்கள் காணப்படும். சேமிப்புக் குறைந்து காணப்படும்.

தேவையற்ற உணர்வுகள் உங்கள் ஆற்றலைக் குறைக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.03.2024




முறையான திட்டமிட்ட அணுகுமுறை மூலம் இன்றைய நாளை அற்புதமான நாளாக ஆக்கலாம். உங்கள் தொடர்பாடல் திறனை மேம்படுத்தினால் பல சிறப்புகளைப் பெறலாம். உங்கள் புத்திசாலித்தனத்தை நன்கு பயன் படுத்த வேண்டும்.

பணிச்சுமை அதிகமாக இருந்தபோதிலும் குறித்த நேரத்துக்குள் பணியை முடிப்பீர்கள். உங்கள் பணிகளை தன்னம்பிக்கையுடன் கையாள்வீர்கள்.

உங்கள் துணையிடம் நகைச்சுவை உணர்வுடன் அணுகுவீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையிலான அன்பு அதிகரிக்கும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படும். சிறிய அளவில் கடன் வாங்கி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.




செயல்களை நிறைவேற்றுவதில் தெளிவான மனநிலையை சார்ந்திருப்பீர்க்கள். இது உங்கள் பேச்சில் வெளிப்படும்.

பணிகளைப் பொறுத்தவரை நிறைய சவால்களை எதிர் கொள்ள நேரும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும். திட்டமிட்டுப் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சில அசௌகரியமான உணர்வுகளை கொள்வீர்கள். நட்பான மற்றும் சகஜமான அணுகுமுறை தேவை.

இன்று பணபுழக்கம் மகிழ்சிகரமாக இருக்காது. பணத்தை தக்க வைக்கும் திறமைகள் இருந்த போதிலும் அதிக செலவுகள் இருப்பதன் காரணமாக பணத்தை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

தாயின் உடல் நிலை பாதிக்கப்படும்.




இன்று பயனுள்ள நாளாக இருக்கும். நீங்கள் நேர்மறையான போக்கில் செயல்பட்டால் இன்று வெற்றிகரமான நாளாக இருக்கும். இன்று திட்டமிட்டு செயலாற்ற வேண்டியது மிகவும் அவசியம்.

உங்கள் பணிகளை திறமையாக முடிப்பதில் சில ஏமாற்றங்களும் தடைகளும் காணப்படும். முன்னுரிமைப்படி பணிகளை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். உங்கள் இனிமையான தொடர்பாடல் மூலம் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படும். அதை சிறந்த விஷயங்களுக்காக பயன்படுத்துவீர்கள்.

உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




உங்கள் அணுகுமுறையில் பொறுமையும் உறுதியும் அவசியம். உங்கள் செயல்களை முன்கூட்டியே திட்டமிடவேண்டியது அவசியம். இன்று சில சௌகரியங்களை இழக்கலாம்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளைக் காட்டுவீர்கள். அதன் மூலம் நற்பெயரைப் பெறுவீர்கள்.

கவலைகளின் காரணமாக பதட்டம் உண்டாகும். உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையிலான உறவின் நல்லிணக்கத்தை அது பாதிக்காதவாறு பார்த்துக்கொள்ளுங்கள்.

வீட்டு சீரமைப்புக்காக பணம் செலவு செய்ய நேரலாம். இதனால் பொறுப்புகள் அதிகரிக்கும். செலவைக் கட்டுப்படுத்துங்கள்.




Discover the Ultimate Investment &
Dynamic Destinations
which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park